## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

O.S. No. 15/2024

**2024 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 21 ம் நாள் புதன்கிழமை**

வா.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி இளநிலை உதவியாளர் திரு.சி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேவி | த/பெ | அசோகன் |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் 1ம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. வம்சாவழி ஜாபிதா வா.சா.ஆ.1
2. வேலுத்தேவர் வாரிசு சான்று உண்மை நகல் வா.சா.ஆ.2
3. எனது ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.3 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)
4. 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.4 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)
5. தாவா 1வது லக்க சொத்திற்கு வேலுத்தேவர் தந்தை முத்திருளாண்டித்தேவர் பெயரிலுள்ள பட்டா இணையதள அசல் வா.சா.ஆ.5

6. தாவா 2 வது லக்க சொத்திற்கு வேலுத்தேவர் பெயரிலுள்ள கணினி பட்டா அசல் வா.சா.ஆ.6

7. தாவா 3 வது லக்க சொத்திற்கு வேலுத்தேவர் பெயரிலுள்ள கணினி நத்தம் பட்டா அசல் வா.சா.ஆ.7

8. தாவா 4 வது லக்க சொத்திற்கு நிர்மலா பெயரில் ஏற்பட்ட 5250 கணினி பட்டா அசல் வா.சா.ஆ.8

9. தாவா 5 வது லக்க செத்திற்கு வேலுத்தேவர் பெயாில் உள்ள 1041 கணினி பட்டா அசல் வா.சா.ஆ.9

10. தாவா 6 வது லக்க சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கணினி பட்டா அசல் வா.சா.ஆ.10

11. வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் (அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்) வா.சா.ஆ.11

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி

**மானாமதுரை**